# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

09th APRIL 2023 | PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 22




## மஹிந்தவை யுத்தத்துக்குத் தள்ளியது யார்?

04








## விமலுக்கு...

03



# மஹிந்த பிரதமரானால்

# இலங்கைக்கு 5 பில்லியன் அமெரிக்க டொலர்:

# வழங்குவதற்குத் தயாராகிறது சீனா

02

## அரசில் இணைவதற்கு இரகசிய கூட்டம்

அரசில் இணைவதற்கு முடிவெடுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் எம்பிக்கள் கடந்த வாரம் கொழும்பு 7 இல் அமைந்துள்ள சொகுசு மாடி ஒன்றில் ரகசிய சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

அரசுடன் இணைவதுதொடர்பில் பல விடயங்கள் அங்கு பேசப்பட்டுள்ளன.குழுவாகச் சென்றே அரசுடன் இணைய வேண்டும் என்று கலந்துகொண்ட அனைவரும் ஏகோபித்த முடிவை எடுத்துள்ளனர்.

அப்படி

02




## புது வருடத்தின் பின் புதிய அமைச்சரவை

### -சஜித் தரப்புக்கும் இடம்-

ஏப்ரல் புது வருடத்தின் பின் புதிய-முழுமையான அமைச்சரவையை அமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அரச வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

02







## ஜனாதிபதி வேட்பாளர்கள் இப்போதே வரிசையில்...

திகதி குறிப்பிடப்படாத ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக இப்போதே வேட்பாளர்கள் முட்டி மோதுகின்றனர் என்றும் தேர்தலுக்கான வேலையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அறிய முடிகிறது.

உத்தியோகபூர்வமாக தேர்தல் இடம்பெறப்போவது 2024 ஒக்டோபர் மாதமாகும்.இருந்தாலும்,நீதிமன்றத்தின் கருத்தைப் பெற்று அதற்கு முன் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி தயாராகி வருகிறார் என்று அரச வட்டாரம் தெரிவிக்கிறது.

ஜனாதிபதி ஒருவர் நான்கு வாருடங்கள் அவரது பதவிக் காலத்தைக் கழித்த பின் தேர்தலுக்குச்



02



புது சுடர்
www.puthusudar.lk
2023 APRIL 09 - SUNDAY

# ஜனாதிபதி தேர்தலுக்காகவே எல்லாம்

IMF நிதி கிடைத்ததுதான் தாமதம். ஒரு பக்கம் பட்டாசு வெடிகள்-இன்னொரு பக்கம் விலைக் குறைப்புக்கள்-இன்னொரு பக்கம் கட்சி தாவல் பற்றிய பேச்சுக்கள்-மறுபக்கம் ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகள் என்று இலங்கையின் அரசியல் தளம் சூடாகத் தொடங்கியுள்ளது.

தாகத்தில் இருந்தவனுக்கு தண்ணீர் கிடைத்ததுபோல் ஆகிவிட்டது ஐஆகு நிதி.அந்தத் தாக்கத்தைத் தீர்த்தவனே நாயகன் என்றாகிவிட்டது இன்றைய அரசியல் நிலைமை.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எல்லாவற்றையும் சீரழித்துவிட்டு ஓட்டம் பிடிக்க அவரது ஆசனத்தில் வந்து அமர்ந்துள்ள ரணில் விக்ரமசிங்க அவரது அனுபவத்தைப் பயன்படுத்தி உடனடியாக நிலைமையை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார்.முன்பிருந்த நிலையை நோக்கி நாட்டைச் செலுத்தத் தொடங்கினார்.

முதலில் எரிபொருள் வரிசைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.அதற்கு அவர் வகுத்த வியூகம்தான் கோட்டா முறைமை.அதாவது,ஞசு சிஸ்டம்.

எரிபொருள் வரிசையைத் தூக்கியதும் மக்களின் எதிர்ப்பு-கொதிப்பு அப்படியே அடங்கிப் போனது. ஐஆகு நிதியைப் பெறுவதற்கான முயற்சியை ஒருபுறம் செய்து கொண்டு மறுபுறம் மக்களைக் கட்டுப்படுத்தும் வேலையைச் சமமாகச் செய்தார்.

இடையில் மின் கட்டணத்தை அதிகரித்து அடங்கிப் போயிருந்த மக்களின் எதிர்ப்பை மீண்டும் தூ ண்டினார்.அதேநேரம் மின் துண்டிப்பை முற்றாக நீக்கி அந்த எதிர்ப்பையும் அடக்கினார்.

இருந்தும்,மின் துண்டிப்பை நீக்கினாலும்கூட மின் கட்டண அதிகரிப்பு என்பது மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

இந்த நிலையில்தான்,ஐஆகு நிதியும் கிடைத்தது.கிடைத்த சில நாட்களில் எரிபொருட்களின் விலையும் குறைக்கப்பட்டது.சமையல் எரிவாயுவின் விலையும் குறைந்தது.

இதனால் மக்களுக்கு ஓரளவாவது நிவாரணம் கிடைத்துள்ளது என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இது நிரந்தரமான ஏற்பாடா அல்லது ஜனாதிபதித் தேர்தல் ஒன்றைக் குறி வைத்து ரணில் விளையாடு கிறாரா.. தேர்தல் முடிந்து-அதில் வென்று மீண்டும் பழைய நிலைக்கு நாட்டைத் தள்ளி விடுவாரா என்ற கேள்வி மக்கள் மனங்களில் எழாமல் இல்லை. இருந்தாலும், இந்த விலை குறைப்புகளின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதற்குத் தயாராகிறார் என்பதை மறுக்க முடியாது.

இன்று ரணில் செய்யும் அரசியல் காய் நகர்தலில் ஒன்றுதான் ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்களை தம் பக்கம் வளைத்துப் போடும் நடவடிக்கை.

இந்த வளைப்பு எதற்கு? இப்போதைய ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்காகவா? ஆட்சியை கொண்டு நடத்துவதற்கு பெரும்பான்மை பலம் இல்லாமலா இருக்கிறது.இல்லை.

அப்படி இருந்தும்,ஏன் ரணில் எதிர்க்கட்சி எம்பிக்களை குறி வைக்கிறார் என்ற கேள்வி எழலாம்.அதற்கான பதில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்காக ரணில் தயாராகிறார் என்பதுதான்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெறாது என்பது உறுதியாகிவிட்டது.எல்லாத் தேர்தல்களையும் நிறுத்திவிட்டு ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதுதான் ரணிலின் திட்டம்.

அது உரிய காலமான 2024 யிலும் இடம்பெறலாம்.அல்லது அதற்கு முன்பும் இடம்பெறலாம்.அதற்கான வாக்குகளைத் திரட்டுவதற்காகவே ரணில் எதிர்க்கட்சி எம்பிக்களை வளைக்கத் தொடங்கியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் சிலருக்கு ரணில் மீது நம்பிக்கை வந்துள்ளது.அவர் இந்தப் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பார் என்று நம்புகிறார்கள்.அப்படித் தீர்த்தால் அவர்தான் வெற்றிபெறுவார்.அதற்கு முன்பே அவருடன் போய் சேர்ந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள் அவர்கள்.

அதற்கான ஏற்பாடுகள்தான் இப்போது இடம்பெறுகின்றன.

# எம்பிக்களுக்கு வைத்திய சேவைகளை வழங்க மறுக்கும் வைத்தியசாலைகள்

எம்பிக்களுக்கான காப்புறுதி தொகையை வழங்குவதற்கு திறைசேரி பின்னடித்து வருவதால் தனியார் வைத்தியசாலைகள் எம்பிக்களுக்கு மருந்து பொருட்களையும் மருத்துவ சேவைகளையும் வழங்குவதற்கு மறுத்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாதிக்கப்பட்டுள்ள எம்பிக்கள் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். பிரதமரையும் சந்தித்து முறையிடுவதற்குத் தயாராகி வருகின்றனர்.

நிதி பற்றாக்குறை காரணமாக திறைசேரி எம்பிக்களுக்கான காப்புறுதி பணத்தை வழங்காமல் உள்ளது என்று தெரியவருகிறது.

வருடாந்தம் எம்பிக்களுக்கான காப்புறுதி தொகையாக தலா 2 லட்சம் ரூபா வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 10 இற்கு மேற்பட்டோர் இற்குப் போட்டி

20ஆவது அரசமைப்பின்படி 30 கெபினட் அமைச்சர்களையே நியமிக்க முடியும்.அந்த வகையில்,இன்னும் எஞ்சி இருப்பது 10 அமைச்சுக்கள் மாத்திரமே. அந்த 10 இற்கும் 10 இற்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுகின்றனர்.

மொட்டு கட்சியில் இருந்து ஜோன்சன் பெர்னாண்டோ,ரோஹித அபயகுணவர்தன,சி.பி.ரத்நாயக்க.எஸ். பி.திஸாநாயக்க,மஹிந்தானந்த அளுத்காமகே உள்ளிட்ட 10 பேரின் பெயர்கள் அமைச்சுப் பதவிகளுக்காக ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

அவர்களுள் அத்தனை பேருக்கும் பதவிகள் கிடைப்பது நிச்சயமில்லை.

மறுபுறம்,ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ராஜித சேனாரத்ன உள்ளிட்ட பலர் வரிசையில் நிற்கின்றனர்.சுகாதார அமைச்சுப் பதவி தந்தால் தான் அரசுடன் இணைவேன் என்று கூறியுள்ளார் ராஜித.

தற்போது சுகாதார அமைச்சராக இருக்கும் கெஹலிய ரம்புக்வல அந்தப் பதவியை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்று தெரிய வருகிறது.

இந்த நிலையில் இரண்டு தரப்பிலும் 10இற்கு மேற்பட்டவர்கள் 10 பதவிகளுக்கு போட்டியிடுவதால் போட்டி கடுமையாகவுள்ளது.

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செல்வதற்கான அவரது விருப்பத்தை அறிவிக்க முடியும்.

ஆனால்,தற்போதைய ஜனாதிபதி நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட இடைக்கால ஜனாதிபதியாக இருப்பதால் சட்டரீதியாக அவருக்கு அந்த அதிகாரம் இல்லை என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில்,ஜனாதிபதி தேர்தலுக்கான நடவடிக்கைகளும் வேட்பாளர்கள் தயாராவதும் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

மொட்டு தரப்பில் ரணில் விக்ரமசிங்க,ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித் பிரேமதாசா,ஜேவிபியில் அனுரகுமார திஸ ாநாயக்க,சிறிலங்கா சுதந்திர கட்சியில் மைத்திரிபால சிறிசேன உட்பட ஏனைய கட்சிகளிலும் வேட்பாளர்கள் தயாராகி வருகின்றனர்.




## மஹிந்த...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த ராஜபக்ஸ மீண்டும் பிரதமரானால் சீன அரசு இலங்கைக்கு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு சீன அரசு தயாராக இருக்கிறது என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மஹிந்தவை மீண்டும் பிரதமராக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அவ்வாறு அவர் பிரதமராகி IMF இன் நிபந்தனைகளை எதிர்ப்பாரானால் ஐஆகு இன் மிகுதி நிதி கிடைக்காமல் போய்விடும்.

அதை ஈடு செய்வதற்காகவும் இலங்கையை மீண்டும் தனது பிடிக்குள் கொண்டு வருவதாகவுமே சீனா இவ்வாறான உதவித் திட்டத்தை அறிவிக்கவுள்ளது என்று இராஜதந்திர வட்டாரத்தில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார பிரச்சினையின் தொடக்கத்தில் சீனா இலங்கைக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்கி உதவுவதற்கு முன்வந்தது இந்தத் தகவலை மத்திய வங்கியின் அப்போதைய ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸ விடம் கூறியபோது கோத்தா அந்தக் கடனை மறுத்துவிட்டார்.

காரணம்,கோத்தாவுக்கு பொருளாதார ஆலோசனை வழங்கி வந்த மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி அந்தக் கடன் உதவியைப் பெற வேண்டாம் என்றும் ஏற்கனவே பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத வங்குரோத்து அடைந்த நாடாக இலங்கையை அறிவித்து கடன் மீளச் செலுத்துவதை இடைநிறுத்துமாறும் கோத்தாவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

அப்படி அறிவித்தால் கடன் பெற முடியாது.இதை கப்ரால் எதிர்த்தார்.ஆனால்,கோத்தா அதே நிலைப்பாட்டில் நின்றார்.அப்படியே அறிவிக்கவும் செய்தது நிதி அமைச்சு.

இதனால் சீனா வழங்கவிருந்த 4 பில்லியன் டொலர் கிடைக்காமல் போனது.அத்தோடு,ஐஆகு இடம் செல்லும் வேலைத் திட்டத்தையும் தொடக்கி வைத்தார் கோத்தா.

அப்போது கிடைக்காமல் போன 4 பில்லியன் இப்போது 5 பில்லியனாகக் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு என்று அரசியல் வட்டாரத்தில் கூறப்படுகிறது.

## அரசில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முடிவெடுத்தால் சஜித்துடன் திஸ்ஸ அத்தநாயக்க,இம்தியாஸ் பாக்கிரமாக்கார் ஆகிய இருவர் மாத்திரமே மிஞ்சுவர் என்று அங்கு அவர்கள் பேசிக்கொண்டனர்.

இரவு விருந்து ஏற்பாட்டுடன் அந்தக் கூட்டம் இடம்பெற்றது என்று அறியமுடிகிறது.

## புது வருடத்தின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதில் முக்கியமாக ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து இணையவுள்ள பலருக்கும் அமைச்சுப் பதவிகள் கிடைக்கவுள்ளன என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அக்கட்சியுடன் இணைந்திருக்கின்ற தமிழ்-முஸ்லிம் எம்பிகளும் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெறவுள்ளனர் என்று மேலும் அறியமுடிகிறது.

இது தொடர்பான பேச்சுக்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இந்த எம்பிக்களுக்கும் இடையில் இடம்பெற்று வருகின்றன என்று ஐக்கிய தேசிய கட்சி வட்டாரம் தெரிவிக்கிறது.

புதிய அமைச்சரவையில் மொட்டு கட்சி எம்பிக்கள் பலருக்கும் அமைச்சுப் பதவிகள் கிடைக்கவுள்ளன என்று மொட்டு தரப்பு கூறுகிறது.

மொட்டு கட்சியைச் சேர்ந்த 10 பேர் ரணில் ஜனாதிபதியானது முதல் அமைச்சுப் பதவிகள் கேட்டு போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவர்களில் பலருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருப்பதால் அந்த 10 பேரில் பலருக்கு அமைச்சுப் பதவி வழங்க முடியாது என்று ஜனாதிபதி தொடர்ச்சியாகக் கூறி வருகிறார்.

இந்த நிலையில்,அந்த 10 பேரில் எத்தனை பேருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்று சொல்ல முடியாது.



# விமலுக்கு வலை விரிப்பது ஏன் ?

**2007இல் விமல் மஹிந்த அரசுடன் இணைந்தபோது கோத்தா பாதுகாப்பு செயலாளர்.அவருடன் அதிக நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டார் விமல். மஹிந்தவின் ஆட்சியின் பிறகு கோத்தாவை ஆட்சிபீடமேற்றும் திட்டத்தை அவருக்கு வகுத்துக் கொடுத்தவர் விமல்தான்.இதன் காரணமாகத்தான் பசிலுக்கும் விமலுக்கும் இடையில் இன்றுவரைக்கும் ஆகாது.பசிலின் ஜனாதிபதி கனவைக் கெடுத்தவர் விமல்தான்.**



பொருட்களின் விலைகள் குறைந்தால் மாத்திரம் வீழ்ந்து கிடக்கும் மொட்டு கட்சி எழும்பிவிடாது.அதை வழிநடத்திச் செல்வதற்கு சரியான தலைவர் தேவை.

மொட்டுவிடம் இருக்கும் அப்படியான ஒரேயொரு தலைவர் மஹிந்த ராஜபக்ச மாத்திரம்தான் .அவருக்கென்று இருந்த மக்கள் ஆதரவை வைத்துத்தான் கோத்தா ஜனாதிபதியானார்.

அதே ஆதரவை வைத்துத்தான்-மஹிந்ததான் பிரதமர் என்று கூறித்தான் 2020 நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றிபெற்றார்கள்.

நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக-அந்த நிலைமைக்கு மொட்டு தரப்பே காரணம் என்பதால் மொட்டு இப்போது வீழ்ந்து கிடக்கிறது. அதைத் தூக்கி நிறுத்த வேண்டிய தேவை இப்போது அக்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

மஹிந்தவை மீண்டும் களத்தில் இறக்கி-மக்களிடம் அழைத்துச் சென்று கட்சியைப் பலப்படுத்தும் செயற்பாட்டில் இறங்கியுள்ளனர் மொட்டு தரப்பினர்.

அதற்கு உண்மையில் மஹிந்த மட்டும் போதாது. மக்களைக் கவரக்கூடிய-நல்ல பேச்சாற்றல்மிக்க அரசியல்வாதிகள் தேவை.அந்தவகையில் மொட்டு தரப்பு மீண்டும் குறிவைத்திருப்பது விமல் வீரவன்சவை.

அதற்குக் காரணம் மஹிந்தவின் வளர்ச்சிக்கு-அவர் ஜனாதிபதி கதிரையை எட்டுவதற்கு விமல் வீரவன்சவின் பங்களிப்பு அளப்பெரியது என்பதுதான்.

மஹிந்த 2005லும் 2010லும் ஜனாதிபதியாவதற்கு மிகவும் பாடுபட்டவர் விமல்.

2005இல் விமல் ஜேவிபியின் மிக முக்கிய இடத்தில் இருந்தவர்.பிரசார செயலாளர்,நாடாளுமன்றத் குழுக்களின் தலைவர் என இரண்டு பதவிகள் அவருக்கு.கட்சிக்குள் பெரும் செல்வாக்கும் அதிகாரமும் இருந்தன அவருக்கு.

அதை வைத்துக்கொண்டுதான் முழு ஜேவிபியுமே மஹிந்தவின் வெற்றிக்காக உழைத்தது. அவர்களின் கடும் உழைப்புதான் மஹிந்தவை வெற்றிபெற வைத்தது.

அந்தத் தேர்தலில் வடக்கு-கிழக்கு தமிழர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்குத்தான் வாக்களிக்கவிருந்தார்கள். அவர் 2001இல் பிரதமராக வந்து புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்ததன்மூலம் ஒட்டுமொத்த தமிழர்களின் ஆதரவும் ரணிலுக்கே இருந்தது.

அந்த ஒப்பந்தத்தை புலிகள் விரும்பாததால் ரணிலைத் தோற்கடிக்கத் திட்டமிட்டு புலிகள் வடக்கு-கிழக்கில் தமிழர்களை வாக்களிக்க விடாமல் தடுத்தனர்.

இதன் காரணமாக மஹிந்த வெற்றிபெற்றார். அப்படி இருந்தும்கூட,அவர் ஒன்றரை லட்சத்துக்கு உட்பட்ட வாக்குகளால்தான் வெற்றிபெற்றார்.ரணிலுக்கு தெற்கிலும் அப்போது கடும் செல்வாக்கு இருந்தது.

ஜேவிபியின் கடும் உழைப்புதான் மஹிந்தவை மயிரிழையிலாவது வெல்ல வைத்தது.இல்லையென்றால் வடக்கு-கிழக்கு வாக்குகள் இல்லாமல் ரணில் வெற்றி பெற்றிருப்பார்.

இந்த வெற்றிக்கு மூல காரணமே விமல் வீரவன்சதான்.அவர்தான் ஜேவிபியின் முழு ஆதரவையும் மஹிந்தவுக்குப் பெற்றுக்கொடுத்து மஹிந்தவை ஜனாதிபதியாக்கினார்.

பின்னர் ஜேவிபி மஹிந்தவுடன் முரண்பட்டுக்கொண்டு அவரிடம் இருந்து விலகி இருந்தாலும்கூட விமல் வீரவன்ச மஹிந்தவுடன் உறவாகவே இருந்தார்.

அந்தத் தனிப்பட்ட உறவு ஜேவிபிக்கு எதிராக அமைந்ததும் விமலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அக்கட்சி முடிவெடுத்தது.

இதன் காரணமாக விமல் உட்பட கட்சியில் அவருக்கு ஆதரவான பல எம்பிக்கள் மஹிந்தவின் அரசில் இணைந்துகொண்டனர்.அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டனர். தனிக்கட்சி ஒன்றையும் அமைத்துக்கொண்டனர்.

அதிலிருந்து வெளிப்படையாகவே மஹிந்தவுக்கு ஆதரவாக செயற்பட்டார்.2010 இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல்,நாடாளுமன்றத் தேர்தல் இரண்டிலும் மஹிந்த பெரும் வெற்றிபெறுவதற்கு விமல் காரணமாக அமைந்தார்.

2015இல் மஹிந்த தோல்வியடைந்தாலும்கூட, அவரை ஓய்வெடுக்க விடாமல் மீண்டும் அரசியலுக்கு இழுத்து வந்தவர் விமல்தான்.

2018 உள்ளூராட்சி சபைத் தேர்தல்,2019 ஜனாதிபதி தேர்தல் மற்றும் 2020 நாடாளுமன்றத் தேர்தல் எல்லாவற்றிலும் விமலின் பங்களிப்பு அதிகம்.

2019 இல் கோத்தாவை ஜனாதிபதியாக்குவதற்காக 2007இல் இருந்தே வியூகம் வகுத்து செயற்பட்டவர் விமல் .

2007இல் விமல் மஹிந்த அரசுடன் இணைந்தபோது கோத்தா பாதுகாப்பு செயலாளர். அவருடன் அதிக நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டார் விமல்.

மஹிந்தவின் ஆட்சியின் பிறகு கோத்தாவை ஆட்சிபீடமேற்றும் திட்டத்தை அவருக்கு வகுத்துக் கொடுத்தவர் விமல்தான்.இதன் காரணமாகத்தான் பசிலுக்கும் விமலுக்கும் இடையில் இன்றுவரைக்கும் ஆகாது.பசிலின் ஜனாதிபதி கணவைக் கெடுத்தவர் விமல்தான்.

கோத்தா ஜனாதிபதியானதும் அப்படிப்பட்ட விமலைக்கூட மதிக்காமல் செயற்படத் தொடங்கினார். கோத்தாவின் பிழையான திட்டங்களை விமர்சிக்கத் தொடங்கினார்.இதனால் விமலையும் அவருடன் துணைக்கு நின்ற உதய கம்மன்பிலவையும் அமைச்சுப் பதவியில் இருந்து விளக்கினார் கோத்தா.

அதன் பின் பொருளாதார நிலைமை உச்சத்தைத் தொட்டதும் விமல்-கம்மன்பில-வாசு ஆகியோர் அரசில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படத் தொடங்கினர்.இப்போதுவரை அப்படித்தான்.

இதன் காரணமாகத்தான்-இப்படி பல வெற்றிகளை பெற்றுக் கொடுத்ததால்தான் மஹிந்த தரப்புக்கு மீண்டும் விமல் தேவைப்படுகிறார்.

கட்சியைப் பலப்படுத்துவதற்கு-மீண்டும் வெற்றியைப் பெறுவதற்கு விமலின் பங்களிப்பு அவசியம் என்று கருதுவதால் விமலுக்கு இப்போது வலைவீசத் தொடங்கியுள்ளது மஹிந்த தரப்பு.

சிக்குவாரா...??? அரசியலில் எதுவும் நடக்கலாம்.

– ஊடகவியலாளர்
எம்.ஐ.முபாறக் –

**ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டில் இருந்து நீங்கள் விலகிவிட்டீர்களா?**

**நீங்கள் தொடர்ச்சியாக ஓரிடத்தில் இருப்பதாகத் தெரியவில்லையே.பல கட்சிகளுக்குத் தாவிவிட்டீர்கள்.ஏன் அப்ப**

**தற்போதைய நாட்டு நிலைமை தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

**இந்த அரசின் அரசியல் செயற்பாட்டை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

**அதிகமான டொலரை எமது அரசியல்வாதிகள்-வர்த்தகர்கள் பதுக்கி வைத்துள்ளமை உண்மையா?**

# மஹிந்தவை யுத்தத்துக்குத் தள்ளியது யார்?



இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் சம்பிக்க ரணவக்க எம்பி. அவரது முழுக்கையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : உங்களது கட்சியின் உருவாக்கத்தின் நோக்கம்?**

பதில் : எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதற்காக-அவர்களுக்கு சரியான நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக உருவாக்கப்பட்டதுதான் இந்தக் கட்சி.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டில் இருந்து நீங்கள் விலகிவிட்டீர்களா?**

பதில் :ஐக்கிய மக்கள் சக்தி உருவான நேரம் அதன் தேவை கட்டாயமாக இருந்தது.நெடுங்காலமாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்தாமல் கட்சி தொடர் தோல்வியைச் சந்தித்து வந்த வேளையில்தான் நாம் மிகவும் கஷ்டப்பட்டு 2015இல் வெற்றியை அடைந்தோம்.

நாம் தோல்வியடைந்திருந்தால் எல்லோரும் ஆறு அடி குழிக்குள் சென்றிருப்போம்.

அந்த வெற்றிக்காக பாடுபட்ட எனக்கும் ராஜிதவுக்கும் மட்டும்தான் மஹிந்த ராஜபக்ச தண்டனை வழங்கினார்.

இதன்பின்தான் ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது.இருந்தும்,அக்கட்சிய ின் உறுப்பினராக நான் இருக்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டோம்.

பெரும் சக்திவாய்ந்த கட்சியாக வளரும் என்று ஐக்கிய மக்கள் சக்தியிடம் எதிர்பாப்புடன் இருந்தோம். ஆனால் அப்படியொன்றைக் காணவில்லை.

இதனால் நான் புதிய கட்சியொன்றை உருவாக்கி களமிறங்கியுள்ளேன். அதற்காக நான் அந்தக் கட்சியை விமர்சிக்கப் போவதில்லை.

**கேள்வி : நீங்கள் தொடர்ச்சியாக ஓரிடத்தில் இருப்பதாகத் தெரியவில்லையே. பல கட்சிகளுக்குத் தாவிவிட்டீர்கள்.ஏன் அப்படி ?**

பதில் : இரண்டு கட்சிகளில் மாத்திரம்தான் நான் உறுப்பினராக இருந்துள்ளேன்.சிஹல உறுமய மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளில் மாத்திரமே.

பல கட்சிகள் பல்வேறு கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அமைத்துள்ளன.

நாங்கள் கூட்டணி அமைத்ததன் காரணமாக செய்யவே முடியாது என்று கூறப்பட்ட பல விடயங்களை நாம் செய்திருக்கிறோம்.

உதாரணத்துக்கு போரை முடித்தமை. நாமே மஹிந்தவை போரை நோக்கித் தள்ளினோம்.இல்லாவிட்டால் இப்போதும் பிரபாகரன் உயிருடன் இருந்திருப்பார். ஒவ்வொரு வருடமும் போரால் 6 ஆயிரம் பேர் மரணிக்கும் நாடாக இது இருந்திருக்கும்.

மஹிந்த யுத்தம் செய்வதற்கு இருக்கவில்லை என்று எல்லோருக்கும் தெரியும்.நாம்தான் மஹிந்தவை யுத்தத்துக்குத் தள்ளினோம்.

நாமும் ஏதோவொரு மூலையில் இருந்திருந்தால் இது நடந்திருக்காது. ஆனால்,நாம் மஹிந்தவின் அரசுக்குள் புகுந்து இதைச் செய்து காட்டினோம்.

அடுத்தது,ஊழல்,மோசடிகள் இல்லாமல் அமைச்சுக்களை கொண்டு நடத்த முடியாது என்ற நிலைப்பாட்டில் இந்த நாட்டு மக்கள் இருந்தார்கள். அதை நாம் மாற்றிக் காட்டினோம். அரச நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்ற முடியும் என்பதை செய்து காட்டினேன்.

அமைச்சுக்களுக்காக இல்லாமல் நாடு எதிர்நோக்கிய பாரிய பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே கடந்த காலங்களில் கூட்டணி சேர்ந்தோம்.அதுதான் எனது கொள்கை.

எதிர்காலத்திலும் நல்ல நல்ல நோக்கங்களுக்காக-முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெறுவதற்காக கூட்டணி அமைப்பதற்குத் தயங்கமாட்டோம்.

**கேள்வி : தற்போதைய நாட்டு நிலைமை தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : இது வங்குரோத்து அடைந்த நாடு.இது இப்போது தற்காலிக போர் நிறுத்தத்தோடுதான் உள்ளது.2022 நிலைமை இப்போது இல்லை.

அப்போது இருந்த பெற்றோல் வரிசை. அந்த வரிசையில் மக்கள் மரணம்.மின் துண்டிப்பு.கேஸ் வெடிப்பு,உரமின்மை போன்ற பிரச்சினைகள் தற்காலிகமாக தீர்க்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு கடன் செலுத்துவது நிறுத்தப்பட்டிருப்பதால்தான் இந்த மாற்றம்.சில பொருட்களின் பாவனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

> **நாம் 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்திருந்தால் எல்லோரும் ஆறு அடி குழிக்குள் சென்றிருப்போம்.கொன்று புதைத்திருப்பார்கள். அந்த வெற்றிக்காகப் பாடுபட்ட எனக்கும் ராஜிதவுக்கும் மட்டும்தான் மஹிந்த ராஜபக்ச தண்டனை வழங்கினார்.**

குறிப்பாக, எரிபொருள் பாவனை 50 வீதத்தாலும் மின் பாவனை 20 முதல் 30 வீதத்தாலும் மட்டுப்படுத்தியுள்ளோம்.

அதுபோல் உணவுப் பாவனையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

220 அரச நிறுவனங்கள் உள்ளன. சிலவை பெயர் பலகை மட்டும்தான்.அவை மூடப்பட வேண்டு.சில நிறுவனங்களை ஒன்றிணைக்க வேண்டும்.

அதேபோல் ஷைஅக சுட்டிக்காட்டியுள்ள 52 நிறுவனங்களுக்கு தொழில்சார் பணிப்பாளர் சபை நிறுவப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் நிச்சயம் அந்த நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்ற முடியும்.

2015இல் எரிபொருள் கூட்டுத்தாபனத்தையும் மின்சார சபையையும் இந்த அடிப்படையில் செய்து இலாபமீட்டி காட்டினேன்.

சில நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்பட வேண்டும். சிறிலங்கா எயார்லைனை தொடர்ந்தும் இயக்கிச் செல்ல முடியாது. தனியார்மயப்படுத்தப்பட வேண்டும்.

**கேள்வி : அப்படியென்றால் நீங்கள் அரசில் இணைந்து அமைச்சராகி இந்த ஆலோசனையை அரசுக்கு வழங்கலாமே?**

பதில் : நீங்கள் நினைப்பதுபோல் அழகானது அல்ல அரசியல். 2015இல் நாம் இணைந் திருக்கா விட்டால் ஐக்கிய தேசிய கட்சியால் மஹிந்தவைத் தோற்கடிக்க முடியாமல் போயிருக்கும். நாம் இணைத்தோம். மஹிந்தவைத் தோற்கடித்தோம். மைத்திரியை ஜனாதிபதியாக்கினோம்.

மைத்திரி என்னை மின்சக்தி -எரிசக்தி அமைச்சராக நியமித்தார்.

நான் பதவியை ஏற்று அமைச்சுக்கு சென்ற முதல் நாளே ஜேவிபி தொழில் சங்கம் எனக்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

நான் சென்று எவ்வளவு நஷ்டம் என்று கணக்காளரிடம் கேட்டேன்.அந்த வருடத்தின் நஷ்டம் மாத்திரம் 4500 ரூபா கோடி என்றார்.

முதலில் தொழில்சார் பணிப்பாளர் சபையை நிறுவினேன்.வேலையைத் தொடங்கினேன்.மின் கட்டணத்தை 13 வீதத்தால் குறைத்தேன்.இன்னும் நஷ்டம் ஏற்படும் என்று எல்லோரும் நினைத்தனர்.

அப்படிக் குறைத்தும்கூட,2000 கோடி ரூபா இலாபம் கிடைத்தது.

அடுத்து நான் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குச் சென்றேன். எரிபொருள் விநியோகிஸ்தர்கள் 66 பேர் இருந்தனர்.அவர்களுள் 4 பேர் மட்டுமே விநியோகம் செய்துகொண்டிருந்தனர்.

திறந்த விலைமனு கோரி போட்டி அடிப்படையில் எரிபொருளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தேன்.

மஹிந்தவால் 154 ரூபாவிற்கு விற்கப்பட்ட பெற்றோலை 117 ரூபாவுக்கு விற்றோம்.134 ரூபாவுக்கு விற்ற டீசலை 95 ரூபாவுக்கு கொடுத்தோம்.

இவ்வாறு விலையைக் குறைத்தும்கூட இலாபம் ஏற்பட்டது.அதற்கு காரணம் அந்த 4 பேருக்கு மாத்திரம் விநியோக வாய்ப்பை வழங்காது திறந்த விலைமாறுகோரலால் எரிபொருளை பெற்றமைதான்.

இதனால் நஷ்டமடைந்த நிறுவங்கள் தலைவரிடம் சென்று இவருக்கு அந்த அமைச்சை வழங்க வேண்டாம் என்று கூறினர்.

இதனால்தான் நான் பெருநகர அமைச்சராக நியமிக்கப்பட்டேன்.

இப்போது புரிகிறதா? எப்படி என்னால் அமைச்சராகி வேலை செய்வது என்று.

ராஜபக்சக்கள் மிண்டும் ஒரு தடவை இந்த மக்களை நெறுக்குவதற்கு நாம் எமது உதவியை வழங்கமாட்டோம்.

**கேள்வி : இந்த அரசின் அரசியல் செயற்பாட்டை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

பதில் : அரசுக்கு எதிரான கருத்துக்களை-செயற்பாடுகளை-விமர்சனங்களை எப்படியாவது அடக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்த அரசு உள்ளது.

ஜனநாயக கட்டமைப்பு இருக்கின்ற ஒரு நாட்டில் இந்த செயற்பாடுகளை அடக்க முடியாது.தற்போது கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கூட துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு.

**கேள்வி : அதிகமான டொலரை எமது அரசியல்வாதிகள்-வர்த்தகர்கள் பதுக்கி வைத்துள்ளமை உண்மையா?**

பதில் : மூன்று வழிகளில் இந்தப் பணம் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.அதில் ஒன்று பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது விலைப்பட்டியலில் பெறுமதியை மாற்றம் செய்கின்றனர்.இறக்குமதியின்போதும் அப்படித்தான்.

வேலைத்திட்டங்களுக்கு வழங்கப்படும் ஆலோசனை சேவைக்கட்டணம் கூட வெளிநாடுகளிலேயே நிறுத்தி வைக்கப்படுகிறது. இப்படி ஒவ்வொரு வருடமும் 2 பில்லியன் டொலர் இலங்கைக்கு வெளியே செல்கிறது.

**கேள்வி : தேர்தல் நடக்குமா?**

பதில் : இல்லை.அரசு தேர்தலை நடத்தாது.நடத்தினால் 4 வீத வாக்குகள்தான் மொட்டு கட்சிக்கு கிடைக்கும்.மொட்டு நடத்திய ஆய்விலேயும் அவ்வாறே கூறப்பட்டுள்ளது.

இதனால் கொஞ்சம் காலம் எடுத்து கட்சியை பலப்படுத்தி வெல்ல முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.என்றார்.

# மஹிந்தவை சூடாக்கிய காஞ்சன

பெற்றோலிய தொழில் சங்க பிரதிநிதிகள் மஹிந்த ராஜபக்ஸவை அவரது இல்லத்தில் சந்தித்தனர்.


அது கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட தொழில் சங்க பிரதிநிதிகளுக்கு நீதியைப் பெற்றுக்கொள்வதற்காக....

நடந்தவற்றை அவர்கள் மஹிந்தவிடம் விரிவாக எடுத்துக் கூறிய பின் மஹிந்த இதுபற்றிப் பேசி அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

அவர் பதிலளிக்கவில்லை.பல தடவைகள் எடுத்தார்.மஹிந்தவைக் கணக்கிலேயே எடுக்கவில்லை காஞ்சன.இதனால் ரொம்பவும் சூடாகிப் போனார் மஹிந்த.



# ஒற்றர்களை அனுப்பிய ரணில்



மொட்டு கட்சி எம்பிக்கள் கொள்ளுப்பிட்டியில் உள்ள ஓர் இடத்தில் கூடிப் பேசினர்.இதை ஏற்பாடு செய்தவர் மொட்டு கட்சி எம்பி சஹன் பிரதீப்.

கூட்டத்தின் நோக்கம் புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பது தொடர்பானது.

இக்கூட்டத்துக்கு ராஜபக்ஸ குடும்ப உறுப்பினர்கள் எவரும் அழைக்கப்படவில்லை.சீனியர்களும் பெரிதாக இல்லை.

பிரசன்ன ரணதுங்க–டிரான் அலஸ் ஆகியோரே சீனியர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அளவுக்கு இருந்தனர்.

இந்த அழைப்புக் கிடைத்த சில ஜனாதிபதிக்கு நெருக்கமான எம்பிக்கள் ஜனாதிபதியிடம் இதுபற்றிக் கூறினார்.

ஜனாதிபதி ஒற்றர்களாக அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கூறினார்.கூட்டம் முடிந்ததும் நடந்தவற்றை அப்படியே தன்னிடம் சொல்ல வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அப்படியே அவர்களும் செய்தனர்.கூட்டம் முடிந்ததும் ஒன்று விடாமல் அப்படியே




# நீலக் குயிலே சோலைக் குயிலே...



ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் எம்பியுமான வஜிர அபயவர்தன கடந்த வாரம் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டார்.

அங்கு அவர் நீல நிற ஆடை அணிந்து வந்திருந்தார்.சேர்ட் மாத்திரமல்ல ,கால் சட்டையும் நீலம்தான்.

அவரது கட்சிக்கு சற்றும் சம்பந்தம் இல்லாத நிறம். சுதந்திர கட்சியின் நிறம்.

நிகழ்ச்சி தொடங்கும் முன் ஊடகவியலாளர் ஒருவர் கேட்டார்.

"""என்ன சேர்,,புள் நிலத்துல... என்ன நடந்த..? என்றார்.

"""எனக்கிட்ட உடுப்பு இல்லியே.. யாராவது தந்தால்தான் உண்டு.இது எனக்கு நெருக்கமான ஒராள் தந்த.. எப்படி நல்லா இருக்கா ...""""

என்றார் வஜிர...

# அவரின் இளமைக்கு... அதுதான் காரணம். அது ...அது...



உயிரிழந்த முன்னாள் எம்பி ஜோசப் மைக்கல் பெரேராவின் உடல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அஞ்சலிக்காக கடந்த வாரத்துக்கு முதல் வரம் ந டாளுமன்றில் வைக்கப்பட்டது.

எதிர்கட்சி -ஆளுங்கட்சி என எல்லா உறுப்பினர்களும் அஞ்சலி செலுத்தினர்.

அந்த இடத்திலும் சில சுவாரசியமான சம்பவங்கள் இடம்பெற்றன.

அதில் கலந்துகொண்டவர்களுள் ஒருவர் ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க.

அவர் இந்த வயதிலும் இளமையாகவும் சுறுப்பாகவும் இருப்பதை அவதானித்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச அவரது அருகில் என்று "" என்ன இவ்வளவு இளமையாக இருக்கிறீங்க..'''' என்று கேட்டார்.

ஜோன் வாய் திறக்கும் முன்பே அருகில் இருந்த மஹிந்த ராஜபக்சவிடம் இருந்து அந்தக் கேள்விக்கு சடாரென பதில் வந்தது.

"" அதுதான் காரணம்...அதுதான்..அது.. அது "

என்று கூறி கண்ணைக் காட்டினார் மஹிந்த.

அது என்ன விஷயம் என்பதை புரிந்த பின்வரிசை இளம் எம்பிக்கள் சத்தமிட்டு சிரிக்கத் தொடங்கினர்.

"" ஓய் ..இது சவ வீடுடா..இப்படி சிரிக்காதிங்கடா..'' என அந்த எம்பிக்களை உரிமையுடன் ஏசினார் ஜோன்.

இளமையாக இருப்பதென்றால் உள்ளம் நன்றாக இருக்க வேண்டும் என்று சொன்னார் ஜோன்.

அதற்கு இன்னொரு எம்பி உள்ளம் நன்றாக இருக்க வேண்டும் என்றால் "" அது வேண்டுமல்லவா..அது..அது..""

என்றார் சிரித்துக்கொண்டு.

""அது "" என்னவென்று உங்களுக்குப்

# அவர் சொன்னால் மட்டுமே விலகுவேன்



தேசிய விளையாட்டு தலைவர் பதவியை வகிப்பவர் முன்னாள் எம்பி அர்ஜுன ரணதுங்க.

அவரை அப்பதவியில் இருந்து விலகுமாறு விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் ஆலோசகர் சுதத் சந்திரசேகர கூறி வருகிறாராம்.

அப்படி இவர் கூறி விலக முடியாது.ஜனாதிபதி சொல்ல வேண்டும்.இல்லையென்றால் விளையாட்டுத் துறை அமைச்சர் சொல்ல வேண்டும்.

அதுவரை விலகமாட்டேன் என்று அடம்பிடிக்கிறாராம் அர்ஜுன.

# மஹிந்தவுடன் மீண்டும் இணைவாரா விமல்?



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில்...?

IMF இடம் சென்றது பிழை என்றா சொல்கிறீர்கள்?

நாட்டின் தலைவர் சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப சென்றால் மக்கள் செய்வது?

நீங்கள் நிலையான ஓரிடத்தில் இல்லை.இப்போது எந்த இடத்தில் நிற்கிறீர்கள் அரசியலில்?

கோத்தாவை ஜனாதிபதியாக்கியது நீங்கள் எடுத்த பிழையான முடிவு என்று நினைக்கிறீர்களா?

**கோத்தாவின் இறுதிக் காலத்தை அமெரிக்காவில் கழிக்க வேண்டும் என்பதுதான் கோத்தாவின் திட்டம்.அதற்காக அமெரிக்காவை சந்தோஷப்படுத்த வேண்டிய தேவை கோத்தாவுக்கு ஏற்பட்டது. அமேரிக்கா இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைத்துக் கொடுத்து இறுதியில் நாட்டை நாசமாக்கிவிட்டார்.**



இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச. அவரது முழுமையான பேட்டி கீழே:

கேள்வி : பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில்...?

பதில் : இது பயங்கரவாதிகளுக்கு எதிரானதுமட்டுமல்ல.அதையும் தாண்டி அரசை விமர்சிப்பவர்களுக்கும் எதிரானது. ஆதாவது ஊடகங்களுக்கு எதிரானது. சுதந்திரமாக தமது கருத்துக்களைத் தெரிவிக்க முடியாது.

அரசுக்கு எதிரான விமர்சனமும் சமூக ஊடகங்களில் போடப்படும் பதிவுகளும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் பதிவுகளாக பார்க்கப்படும்.

அந்த விமர்சனங்களை வெளியிடும் ஊடக நிறுவனங்கள் தடை செய்யப்படுவதோடு சொத்துக்களும் அரசுடைமையாக்கப்படும்.

ஒருவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தாமல் ஒரு வருடம் தடுத்து வைத்து பொலிஸால் விசாரணை செய்ய முடியும்.

கேள்வி : இப்படியான ஒரு சட்டத்தை ஏன் அரசு கொண்டுவருவதற்கு முயற்சி செய்கிறது?

பதில் :பயங்கரவாதிகள் இப்போது இல்லாததால் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி புதிய சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கை எல்லோராலும் முன்வைக்கப்பட்டு வருகிறது. அதைப் பயன்படுத்தி மக்களை அடக்கும் வகையில் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு முற்படுகிறது.

ஜனாதிபதி அவருக்கு கிடைத்துள்ள ஜனாதிபதி பதவியை இதனூடாகப் பாதுகாப்பதற்கு தயாராகிறார்.

என்னதான் தற்காலிகமாக கேஸ்,பெற்றோல் விலை குறைந்தாலும் இது நிரந்தரமில்லை என்றும் பொருளாதார பிரச்சினைக்கு அவரால் நிரந்தர தீர்வை முன்வைக்க முடியாது என்றும் அவருக்குத் தெரியும்.அதனால்தான் இவ்வாறு சட்டமூலம் ஊடாகத் தனது பதவியைப் பாதுகாக்கப் பார்க்கிறார்.

கேள்வி : நாடாளுமன்றத்தில் இதைத் தோற்கடிக்கும் கடமை மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்டல்லவா?

பதில் : ரணிலை திருடர் என்று கூறியவர்களே 134 வாக்குகளை இட்டு அவரை ஜனாதிபதியாக்கினர். ரணில் இந்தச் சட்டத்தின் ஊடாக அவர்களின் தேவையை நிறைவேற்றப் போகிறார்.அவர்களுக்காவே இது கொண்டுவரப்படுகிறது.

அப்படியென்றால் அந்த 134 வாக்குகளும் இதற்கும் கிடைக்கும்.நாடாளுமன்றில் தோற்கடிக்கப்படாது.இதற்கு எதிராக நீதிமன்றம் செல்வது மாத்திரம்தான் எமக்கு மிஞ்சி இருக்கும் ஒரே வழி.

இல்லாவிட்டால் முழு நாட்டு மக்களும் வீதிக்கு இறங்கி இதற்கு போராடினால்தான் இதை ஜனாதிபதி வாபஸ் வாங்குவார். கட்சிகள் அனைத்தும் இதற்கு எதிராக ஒன்றிணைய வேண்டும்.

கேள்வி : இந்தச் சட்டதைக் கொண்டுவருவதற்கு சர்வதேச அழுத்தம் உண்டா?

பதில் : முதல் ஏதாவது சிறிய சம்பவம் நடந்தாலும் அதற்கு எதிராக அமெரிக்க தூதுவர் ட்விட் போடுவார்.இப்போது இல்லை.இந்தச் சட்டமூலத்துக்கு எதிராகவும் ஒரு ட்விட்டும் இல்லை.

இதன்மூலம் தெரிகிறது அல்லவா அமெரிக்காவின் தலையீடு இதில் உள்ளது என்று.

பெப்ரவரி-14 இல் வழி ளநஉசநவ அளைளழைெ என்ற பெயரில் அமெரிக்க உளவு பிரிவு இலங்கை வந்து சென்றது. அது அமெரிக்காவின் நாங்கு விடங்களை நிறைவேற்றுவதற்காக..

01-கடலுக்கு அடியில் செல்கின்ற தொலைபேசி கேபிளை அமேரிக்கா ஒத்துக்கேட்பதற்கு இலங்கையின் அனுமதியைப் பெறுதல்,

02-அமெரிக்காவின் விசேட கருவியை விமான நிலையத்தில் பொருத்தி விமானங்கள் அனைத்தையும் அமேரிக்கா கண்காணித்தல்..

03-எமது உளவு பிரிவு பணிப்பாளருக்கு மேல் அமெரிக்காவின் பணிப்பாளர் ஒருவரை நியமித்தல்.அவர்தான் எந்த உளவு பகிரப்பட வேண்டும்எந்த செய்தி மறைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்வார்.

04-அமெரிக்க படையினர் ஆயுதங்களுடன் இலங்கைக்குள் நடமாடுதல்.

இது நான்கும் பேசப்பட்டு முதல் மூன்றுக்கும் இலங்கை விருப்பம் தெரிவித்தது.நான்காவது கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இந்த விடயங்களுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தால் அதை ரணில் கட்டுப்படுத்துவதற்கு இப்படியான சட்டம் தேவை.

ஆக,அமெரிக்காவின் தேவைக்கு ஏற்பவே இந்தச் சட்டம்மூலம் கொண்டுவரப்படுகிறது.

கேள்வி : imf இடம் சென்றது பிழை என்றா சொல்கிறீர்கள்?

பதில் : இதற்கு முன் 16 தடவைகள் சென்றுள்ளோம்.இலங்கையின் பொருளாதாரம் ஐஅக இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.ஐஅக இந்த கையில் சிக்கினால் ஒருபோதும் பொருளாதாரம் எழும்பாது.உலகில் எங்குமே அப்படியொரு முன்னேற்றம் ஏற்பட்டதில்லை.

அவர்கள் இந்த நிலைமையை அப்படியே வைத்துக்கொண்டு அமெரிக்காவின் தேவையை நிறைவேற்றிக்கொள்வார்கள்.

எதிர்க்கட்சிகள் எல்லாம் ஐஅக இற்கு ஆதரவு வழங்குகின்றன.

அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தி எல்லாத்தையும் நாசமாக்கினார் ஜெ.ஆர்.அதேவேலையை செய்ய பார்க்கிறார் ரணில்.

கேள்வி : நாட்டின் தலைவர் சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப சென்றால் மக்கள் செய்வது?

பதில் :முதலில் கடன் மூலம் வாழ்கின்ற மனோநிலையில் இருந்து நாம் வெளியில் வரவேண்டும்.உள்ளூர் உற்பத்தியைக் கூட்ட வேண்டும்.ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்.இளைஞர்களுக்கு உரிய தொழிற்பயிற்சி வழங்கி வெளி நாடுகளுக்கு அனு ப்ப வேண்டும்.அதன் மூலம் அதிக டொலர் கிடைக்கும்.

உற்பத்தி துறைக்கு ஏற்ப கல்வி முறைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

அதைவிட்டு ஐஅக இடம் இருந்து கடன் கிடைத்ததும் பட்டாசு சுட்டு மகிழ்கின்ற சமூகமாக நாம் இருக்கிறோம்.மீண்டும் கடன் வாங்குவதற்கு எதிர்பார்க்கிறோம்.

இந்தப் பயணத்தைத் தொடர்ந்து செய்ய முடியாது.மீண்டும் நாடு விழும்.

கேள்வி : நீங்கள் நிலையான ஓரிடத்தில் இல்லை.இப்போது எந்த இடத்தில் நிற்கிறீர்கள் அரசியலில்?

பதில் : அந்தப் பக்கம் இந்தப் பக்கம் மாறினாலும் கொள்கை மாறவில்லை. அதுதான் முக்கியம்.சுனில் ஹந்துநெத்தி ஓரிடத்தில் பேசுகிறார் அரசு ஐஅக இடம் செல்ல வேண்டும் என்று.இன்னோர் இடத்தில் பெருகிறார் போகக்கூடாது என்று.

அவர்கள் ஓரிடத்தில் இருந்தாலும் கொள்கையில் நிலையாக இல்லை.நாங்கள் இடம் மாறினாலும் கொள்கை மாறவில்லை.

கொள்கைதான் முக்கியமே தவிர இடமல்ல.இது எமக்கு சாதகமான கொள்கை அல்ல.இதனால் எதிரிகள் அதிகம் வளருவார்கள்.எதிர்ப்புகள் கூடும்.எமக்கு எதிரான தாக்குதல்கள் கூடும்.

உயிர் ஆபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

கேள்வி : கோத்தாவை ஜனாதிபதியாக்கியது நீங்கள் எடுத்த பிழையான முடிவு என்று நினைக்கிறீர்களா?

பதில்: அவரை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் முடிவெடுத்தபோது அவர் தோல்வியடைந்த-இயலாத தலைவராக இருக்கவில்லை.

பாதுகாப்பு செயலாளராக – நகர அபிவிருத்தி செயலாளராக அவருக்கு கொடுத்த பணிகளை வெற்றிகரமாக செய்து முடித்தார்.

இறுதியில் பி.பி.ஜயசுந்தர, மிலிந்த மொரகொட,அமெரிக்க தூதுவர்,அவரது குடும்பம் இப்படி எல்லோரது வலையிலும் வீழ்ந்துவிட்டார்.

கோத்தாவின் இறுதிக் காலத்தை அமெரிக்காவில் கழிக்க வேண்டும் என்பதுதான் கோத்தாவின் திட்டம்.அதற்காக அமெரிக்காவை சந்தோஷப்படுத்த வேண்டிய தேவை கோத்தாவுக்கு ஏற்பட்டது.

நான் பிழைவிடவில்லை. எனது மனசாட்சிக்கு ஏற்பவே இதுவரை செயற்பட்டுள்ளேன்.ஜேவிபியில் இருக்கும்போதுகூட அப்படித்தான்.

கேள்வி: மஹிந்தவுடன் மீண்டும் இணைவீர்களா?

பதில்: அது ஒருபோதும் நடக்காது.என்றார்.



# மஹிந்தவைத் தூக்கி நிமிர்த்தும் சீனா

வீழ்ந்து கிடக்கும் மொட்டு எழுந்து நிற்பதற்கு முயற்சி செய்கிறது.அதற்கு அவர்களுக்குத் தேவை ஒரு தலைவர்.

இருந்த தலைவர் ஓடிவிட்டார்.இருக்கின்ற தலைவர் மஹிந்ததான்.அவரை இப்போதுள்ள நிலையில் வைத்துப் பாவிக்க முடியாது.காற்றடிக்க வேண்டும். பெரிய பதவியொன்றைக் கொடுக்க வேண்டும். அதை வைத்துக்கொண்டு மக்களிடம் செல்ல வேண்டும்.பிரசார பணியில் இறங்க வேண்டும்.

ஜனாதிபதி பதவியைப் பறித்து அவரிடம் கொடுக்க முடியாது.பிரதமர் பதவியை மட்டும்தான் பறிக்க முடியும்.

அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளார்கள் மஹிந்தவாதிகள்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்து இதை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

“மஹிந்தவை முன்நிறுத்தினால்தான் மீண்டும் மொட்டுக் கட்சியைக் கட்டியெழுப்ப முடியும்.அதற்குத் தேவை அவருக்கு பிரதமர் பதவி.பதவியை வீட்டுக் கொடுங்கள். கட்சியைக் கட்டியெழுப்புவோம்.“

இதற்கு தினேஷிடம் இருந்து எந்த பதிலும் இல்லை.

ராஜபக்ஸவின் யுகத்தில் தினேஷ் போன்றவர்களுக்கு பிரதமர் பதவி கிடைப்பதென்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று.

இருந்தாலும், அவருக்கு அந்தப் பதவி கிடைத்தது.அதற்குக் காரணம் நாட்டில் ஏற்பட்ட அந்தக் குழப்பம்தான். அந்தக் குழப்பத்தால் மஹிந்த பிரதமர் பதவியில் விலகினார்.ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் கோத்தாபய ஜனாதிபதி பதவியில் இருந்து விலகினார்.ரணில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.ரணில் வகித்த பிரதமர் பதவி தினேஷ் குணவர்தனவுக்கு வழங்கப்பட்டது.

இப்படித்தான் அவருக்கு-தினேசுக்கு பிரதமர் பதவி கிடைத்தது.நாட்டில் ஏற்பட்ட அந்தக் குழப்பம்தான் அவருக்கு அதிஷ்டத்தைக் கொண்டு வந்தது.

சாதாரண நிலையில் அப்படியான ஓர் உயர் பதவி கிடைப்பதைப்பற்றி நினைத்துகூடப் பார்க்க முடியாது.

அப்படி அதிஸ்டவசமாகக் கிடைத்த பிரதமர் பதவியைப் பறிக்கப் பார்க்கிறார்கள் மஹிந்தவாதிகள்.

மஹிந்தவை மீண்டும் பிரதமராக்கும் முயற்சியின் பின்னால் இருப்பது சீனா. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமெரிக்க சார்பு போக்கை முற்றுமுழுதாகப் பின்பற்றி வருகிறார்.இந்தியாவின் பக்கமும் சாய்கிறார்.

இது சீனாவுக்கு ஆபத்தான போக்கு.இலங்கையில் தொடங்கப்பட்டுள்ள சீன முதலீடுகளுக்கு இது ஆபத்தாக இருக்கும் என்று சீனா கருதுகிறது.

> மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதிதான் சீனாவுக்கு இங்கையில் பொற்காலம். அந்த பொற்காலம் மீண்டும் மலர வேண்டுமென்றால் மீண்டும் மஹிந்த தலைதுக்க வேண்டும்.அதற்கான வேலையைத்தான் செய்கிறது சீனா.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதிதான் சீனாவுக்கு இங்கையில் பொற்காலம்.அந்த பொற்காலம் மீண்டும் மலர வேண்டுமென்றால் மீண்டும் மஹிந்த தலைதூக்க வேண்டும்.அதற்கான வேலையைத்தான் செய்கிறது சீனா.

கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள மஹிந்தவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அடிக்கடி மஹிந்தவுக்கும் இலங்கைக்கான சீனத் தூதுவருக்கும் இடையில் சந்திப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

மஹிந்தவை மீண்டும் பிரதமராக்குவதற்கான-அவரை மேலே உயர்த்துவதற்கான வியூகத்தை வகுக்கும் சந்திப்புகள்தான் அவை.

பிரதமரானாலும்கூட,மக்கள் மொட்டுவை மீண்டும் ஏற்பார்களா...நடந்தவற்றை அவ்வளவு இலகுவில் மறப்பார்களா என்ற கேள்வி எழுகிறது.

தேர்தல் ஒன்றுதான் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லும்....





# அன்று கரு... இன்று ராஜித...

## சஜித்தை பழிவாங்குவதற்கு அருமையான வாய்ப்பு

அரசியல் அரங்கில் இப்போது அதிகம் அடிபடுகின்ற கதைகளில் ஒன்று கட்சி தாவல்.பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து அரசுக்கு.

பாயப் போகிறவர்கள் 20 பேர் என்றும் 40 பேர் என்றும் சொல்லப்படுகிறது.இந்த விடயத்தில் வெளிப்படையாக இருக்கின்றவர் ராஜித சேனாரத்ன.

சுகாதார அமைச்சைத் தந்தால் அரசுடன் இணைவதற்குத் தயார் என்று வெளிப்படையாகவே கூறி வருகிறார்.இருந்தாலும்,தனியே சென்று இணையாமல் ஒரு குழுவாகச் சேர்ந்து இணையவே அவர் விரும்புகிறார்.

அதாவது,2007 இல் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து கரு ஜயசூர்யவின் தலைமையில் 17 பேர் மஹிந்தவின் அரசில் இணைந்துகொண்டனர். அவர்களுள் ராஜிதவும் ஒருவர். அப்படியான ஓர் இணைவாகத்தான் இதுவும் இருக்கப்போகிறதோ-ராஜிதவின் தலைமையில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் அரசுடன் இணையப் போகிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது.

அன்று கரு ஜயசூரிய குழுவினர் மஹிந்தவுடன் இணைவதற்கு சொல்லப்பட்ட காரணம் அப்போது மஹிந்த ஆரம்பித்து வைத்த புலிகளுக்கு எதிரான போரை வெற்றிகரமாக முடித்து வைப்பதற்காக மஹிந்தவுக்கு உதவுதல் என்பதாகும்.

இன்று சொல்லப்படுகின்ற காரணம் ரணில் ஆரம்பித்து வைத்துள்ள பொருளாதாரப் போரை வெற்றிகொள்வதற்காக ரணிலுக்குக் கை கொடுத்தல் என்பதாகும்.

> அன்று கரு ஜயசூரிய குழுவினர் மஹிந்தவுடன் இணைவதற்கு சொல்லப்பட்ட காரணம் அப்போது மஹிந்த ஆரம்பித்து வைத்த புலிகளுக்கு எதிரான போரை வெற்றிகரமாக முடித்து வைப்பதற்காக மஹிந்தவுக்கு உதவுதல் என்பதாகும்.இன்று சொல்லப்படுகின்ற காரணம் ரணில் ஆரம்பித்து வைத்துள்ள பொருளாதாரப் போரை வெற்றிகொள்வதற்காக ரணிலுக்குக் கை கொடுத்தல் என்பதாகும்.

உண்மையில்,அதற்காகத்தான் ரணில் இவர்களை அரசில் சேர்த்துக்கொள்ளப் போகிறாரா? அப்படியென்றால் இவர்கள் பொருளாதார நிபுணர்களாக அல்லவா இருக்க வேண்டும். அப்படியான எதுவும் இவர்களில் இல்லையே.

அப்படி
யென்றால் எதற்காக அரசில் சேர்க்கப் போகிறார்? எல்லாம் அரசியல் குத்து வெட்டுத்தான்.

ரணிலுக்கு தற்போது இருக்கின்ற ஒரே
யொரு அரசியல் எதிரி சஜித் பிரே
மதா
ஸாதான்.

2020 நாடாளு
மன்றத் தேர்தலில் வரலா
ற்றில் என்று
மில்லாத
வாறு படு
தோல்வி அடைந்தது ஐக்கிய தேசிய கட்சி.

அந்தத் தோல்விக்குக் காரணம் சஜித் பிரேமதாசாவும் அவரது கட்சியும்தான்.சஜித் தரப்பு ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து புது கட்சியை உருவாக்கி அந்தத் தேர்தலில் போட்டியிட்டமையே அந்தத் தோல்விக்குக் காரணம்.

ஓர் ஆசனத்தைக்கூட பெறாமல் தோல்வியடைந்த ஐக்கிய தேசிய கட்சிக்கு இனி எதிர்காலமே இல்லை என்ற நிலை ஏற்பட்டது.இந்த நிலைக்குக் காரணம் சஜித்தான்.

அதனால் சஜித்மீது கடும் கோபத்தில் இருந்தார் ரணில். அப்படிக் கோபத்தில் இருக்கும் ஒருவருக்கு வாய்ப்புக் கிடைத்தால் எப்படி பழிவாங்குவார் என்பதைச் சொல்லத் தேவை இல்லை.

ஜனாதிபதி என்ற பெரும் பதவி அதிஸ்டவசமாகக் கிடைத்துள்ளது ரணிலுக்கு.இந்தப் பதவியைப் பயன்படுத்தி தனது ஐக்கிய தேசிய கட்சியைப் பலப்படுத்துவதற்கும் ஐக்கிய தேசிய கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமான ஐக்கிய மக்கள் சக்தியைப் பலவீனப்படுத்துவதற்கும் களமிறங்கியுள்ளார் ரணில்.

அக்கட்சியில் இருந்து பெரும் எண்ணிக்கையிலானவர்களை தன் பக்கம் வளைத்துப் போடுவதன்மூலம் இந்தத் திட்டத்தை அரங்கேற்றப் போகிறார் அவர்.

2007இல் கரு ஜயசூர்யவின் தலைமையில் 17 பேரை ஒரே நேரத்தில் தன் பக்கம் இழுத்துப் போட்டு ஐக்கிய தேசிய கட்சியை மஹிந்த பலவீனப்படுத்தியதுபோல் ரணில் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து அதிகமானவர்களை வளைத்துப் போட்டு ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்தப் போகிறார்.

அவ்வாறு வளைத்துப் போட்டாலும் சஜித் தரப்பு பலவீனமடையுமா என்று இனி வருகின்ற தேர்தல்கள்தான் முடிவு செய்யும்.

# கொமர்ஷல் வங்கிக்கு 7 விருதுகள்




டிஜிட்டல் கண்டுபிடிப்புக்களில் தனது திகைப்பூட்டும் செயற்பாட்டை அண்மையில் கொமர்ஷல் வங்கி வெளிப்படுத்தி உள்ளது. லங்காபே தொழில்நுட்ப விருது வழங்கும் விழாவில் வங்கித்துறைக்கான பிரிவில் வங்கிப்பிரிவுக்கான ஒட்டு மொத்த விருது உள்ளடங்களாக ஏழு விருதுகளையும் வென்று அது சாதனை படைத்துள்ளது. கொடுப்பனவு முறை செயற்பாடுகளுக்கான புதிய தொழில்நுட்பங்களுக்காக வழங்கப்படுகின்ற ஒரேயொரு விருது இதுவாகும்.

வங்கி பெற்றுக்கொண்ட இந்த சுவாரஸ்யமான விருதுகளில் நான்கு தங்க விருதுகளும் அடங்கும். வங்கி நிறுவனங்களுக்கான உள்ளக டிஜிட்டல் கொடுப்பனவுகளில் ஒட்டு மொத்த ஆற்றல், சில்லறை கொடுப்பனவுகளுக்கான மிகச் சிறந்த வங்கி, லங்கா ஞசு வழியாக சில்லறை கொடுப்பனவுகளுக்கான சிறந்த நடமாடும் செயலி, இவ்வாண்டின் சிறந்த புதிய கண்டு பிடிப்புக்களுக்கான வங்கி என்பனவே தங்க விருதுகளுக்கான பிரிவுகளாகும்.

ஆண்டின் சிறந்த டிஜிட்டல் கொடுப்பனவு மூலோபாய நிதி நிறுவனம், ஆண்டில் லங்காபே கார்ட் செயற்பாடு என்பனவற்றுக்கான வெள்ளி விருதுகள், நிதி உள்ளடக்கத்துக்கான இவ்வாண்டின் மிகச் சிறந்த வங்கிக்கான தகுதிக்குரிய விருது என்பனவே மொத்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட விருதுகளாகும்.

# DSI சுப்பர்ஸ்போர்ட் பாடசாலைகள் கரப்பந்தாட்ட சாம்பியன்ஷிப்




21வது DSI Supersport Schools Volleyball Championship ஐ ஆரம்பிப்பதாக DSI அறிவித்தது.இலங்கை கரப்பந்து,கல்வி அமைச்சின் பாடசாலை கரப்பந்து சங்கம் ஆகியோரின் ஆதரவுடன் நாட்டிலேயே முதலிடத்தில் உள்ள பாதணிகள் உற்பத்தியாளர் னுளுஜ இலங்கை கரப்பந்தாட்டத்தின் வரலாற்றுப் புத்தகத்தில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ள இந்தப் போட்டியை ஏற்பாடு செய்ய முன்வந்துள்ளது.

இலங்கை கரப்பந்து சம்மேளனம் மற்றும் கல்வி அமைச்சுடன் இணைந்து 1999 ஆம் ஆண்டு DSI ஆல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சாம்பியன்ஷிப் போட்டியின் நோக்கம் கிராமிய மற்றும் நகர்ப்புற கரப்பந்து வீரர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குவதும் தேசிய மற்றும் சர்வதேச அரங்கில் அவர்களின் திறமைகளை வெளிக்காட்டுவதும், அவர்களின் வாழ்க்கையை கட்டியெழுப்புவதும் அவர்களுக்கு தேசிய தரத்தின் ஒரு தளத்தையும் வழங்குவதுமாகும்.

தொடக்கம் முதலே மொத்தம் 198 அணிகள் பங்கேற்று, பாடசாலை கரப்பந்து சாம்பியன்ஷிப் கிட்டத்தட்ட 400 விளையாட்டு வீரர்களின் வளர்ச்சிக்கு பங்களித்துள்ளது. இந்த ஆண்டு, நாடு முழுவதிலுமிருந்து 5,000 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்கும் என ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

2023 DSI Supersport Schools Volleyball Championship ஆனது 21வது ஆண்டைக் குறிக்கின்றது என்பதால், DSI இல் எங்களுக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க சந்தர்ப்பமாகும். மிகவும் எதிர்பார்க்கப்படும் இந்த வருடாந்த நிகழ்வுக்கு DSI அனுசரணை வழங்குவது மகிழ்ச்சியாகும். இது நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த திறமையான இளம் விளையாட்டு வீரர்கள் மற்றும் பெண்களுக்கான அங்கீகாரத்திற்கான தளமாக விளங்குகிறது.




# Brandix இன் 'RightToRead'

நாடு முழுவதையும் சேர்ந்த 10,194 பாடசாலைகளின் கற்றல் கட்டமைப்பை மேம்படுத்த இணைப்புத்திறன் வசதி வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் மாணவர்களுக்கு கற்றல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் வசதியை மேம்படுத்தும் வகையில், ஆங்கில வாசிப்புத் திறனை கட்டியெழுப்புவதற்காகவும், கல்வி அமைச்சுடன் இணைந்து, Brandix இனால், 2018 ஆம் ஆண்டில் 'சுபைாவவுழசுநயன' எனும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் English Helper – India இனால் உருவாக்கப்பட்ட 'ReadToMe' ஆங்கிலம் பயிலல் சாதனம் அறிமுகம் டீசயனெைழ இனால் செய்யப்பட்டிருந்ததுடன், அதனூடாக, இலங்கை மாணவர்களின் வாசிப்பு மற்றும் புரிதல் திறனை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த திங்கட் கிழமை, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பொரளை சுசமயவர்தன வித்தியாலயத்துக்கு விஜயம் செய்து இந்தத் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் சிறுவர்கள் மற்றும் கற்பித்தலில் ஈடுபடுவோர் கல்விசார் தொழில்நுட்பத்துடன் எவ்வாறான ஈடுபாட்டைக் கொண்டுள்ளனர் என்பது பற்றியும் பார்வையிட்டார்.

# 120,000 குடும்பங்களுக்கு நிவாரணம்

நாட்டில் நிலவும் பொருளாதாரச் சூழலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்திற்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட "மனிதநேய ஒன்றிணைவு" எனும் மனிதாபிமான நடவடிக்கை மூலம் இதுவரை நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய 120,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்துள்ளது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, சர்வோதய சிரதான சங்கம் மற்றும் PwC ஸ்ரீ லங்கா ஆகியன இணைந்து இதை ஆரம்பித்ததுடன் பின்னர் படிப்படியாக CBL Group, Citi Bank, Sunshine Holdings PLC, Huawei Technologies Lanka Company, Unilever Sri Lanka, London Stock Exchange Group மற்றும் Roar Global ஆகிய நிறுவனங்களும் இதில் இணைந்து கொண்டன.





பயனுள்ள பொருளாதார மீட்புத் திட்டத்தின் மூலம் நாட்டில் நிலையான பலன் பரிமாற்ற முறை நிறுவப்படும் வரை "மனிதநேய ஒன்றிணைவு" திட்டம் அதன் நிவாரணப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

நாடு முழுவதும் கடுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான கூட்டு முயற்சியில் பங்களிக்குமாறு "மனிதநேய ஒன்றிணைவு" ஏனைய அனைத்து மக்களையும் நிறுவனங்களையும் அழைக்கின்றது.

"மனிதநேய ஒன்றிணைவு" நிவாரண திட்டத்திற்கு நீங்கள் எவ்வாறு நன்கொடை அளிக்கலாம் என்பது பற்றிய விபரங்களுக்கு https://www.dialog.lk/corporate க்கு செல்லுங்கள்.

வர்த்தக சுடர்

# The Coconut Tree
## உணவக வர்த்தகநாமம் இலங்கையில்...




ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இலங்கையர்களால் ஆரம்பிக்கப்பட்ட, பல மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள, விருதுகளை வென்ற, இலங்கையை கருப்பொருளாகக் கொண்ட உணவகச் சங்கிலியாக அமைந்துள்ள, "The Coconut Tree", 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி இலங்கையில் தனது வர்த்தகநாமத்தை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தி வைத்துள்ளது.

அங்கு இலங்கையின் சுவையான மற்றும் வண்ணமயமான சுவையுணவுகளை காட்சிப்படுத்தி, பெருவெற்றி கண்டுள்ள "The Coconut Tree", தற்போது இலங்கையில் தனது வர்த்தகநாமத்தின் செயல்பாட்டை முன்னெடுக்கத் தயாராகவுள்ளது.

ஸ்தாபகர்களான Mr. Mithra Fernando Director/Co-Founder முக்கிய பிரமுகர்கள் மற்றும் அதிதிகளின் பங்குபற்றுதலுடன் உத்தியோகபூர்வ அறிமுக நிகழ்வு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

The Coconut Tree இன் பிரதம நிதியியல் அதிகாரியான மித்ரா பெர்னாண்டோ அவர்கள் இந்த அறிமுகம் பற்றி கருத்து வெளியிடும் போது, "இலங்கையின் சமையல் சுவைகளை பிரித்தானியாவின் மது விடுதிக் கலாச்சாரத்துடன் (Pub) ஒன்றிக்கச்செய்வதில் ஒரு பொழுதுபோக்காகவும், பெரும் ஆர்வமாகவும் ஆரம்பித்த ஒரு முயற்சி, இப்போது உலகளாவிய விஸ்தரிப்பைக் காணுகின்ற ஒரு பெரிய வணிகமாக வளர்ச்சி கண்டுள்ளது என்றார்.



# வடக்கு-கிழக்கில் விநியோகஸ்தர் தளத்தை விரிவுபடுத்தும் Hayleys

இலங்கையின் தேங்காய் நார்ப் பொருட்களை உற்பத்தி செய்யும் உயலடநலள குழுமத்தின் துணை நிறுவனமான Eco Solutions, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய செயற்பாடுகளை அமைத்து அதன் விநியோக தளத்தை 20மூ ஆக விரிவுபடுத்தியுள்ளது.

இப்பகுதியில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுடன் பணிபுரியும் Eco Solutions பாரம்பரிய தேங்காய் முக்கோணத்திற்கு அப்பால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, பலாலி, அம்பாறை மற்றும் பொலன்னறுவை வரை தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியது.

இந்த நடவடிக்கையானது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள உலகளாவிய விநியோகச் சங்கிலிகளுடன் விவசாயிகளின் வலையமைப்பை உருவாக்குகிறது.அதே நேரத்தில் பல குடும்பங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறது.

“ஹேலிஸ் குழுமம், 145 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தேங்காய் பொருட்களை உற்பத்தி செய்வதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. பாரம்பரிய தென்னை முக்கோணத்தில் சிறு விவசாயிகளுடன் விரிவாகப் பணியாற்றியதால் நாடு முழுவதும் புதிய விவசாயி வலையமைப்புகளை உருவாக்குவதற்கான கருவிகள் மற்றும் அறிவு எங்களிடம் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

“கடந்த சில வருடங்களாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் இதற்குச் சான்றாகும்.இதுவரை இப்பகுதியில் உள்ள 30க்கும் மேற்பட்ட விவசாயிகளுடன் நாங்கள் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். இனி வரும் ஆண்டுகளில் இந்த உறவை மேலும் வலுப்படுத்த நாங்கள் எதிர்பார்க்கிறோம்,” என Eco Solutionsஇன் ரஜீவ் குணதிலக்க தெரிவித்தார்.

# சிறுநீரக நோயாளர்களுக்கு ஹேமாஸின் இலவச சிகிச்சை


இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு முகங்கொடுத்து கடுமையான அழுத்தத்தில் வாழும் சிறுநீரக நோயாளர்களுக்கு உகந்த சுகாதார சேவையை உறுதிசெய்துள்ள ஹேமாஸ் மருத்துவமனை குழுமம், அதன் சமூகப் பொறுப்பு வேலைத்திட்டமான




”உபகார” என்ற தேசிய திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

நாள்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற நோயாளிகளுக்கு உதவும் இத்திட்டத்தின் மூலம் அவர்களுக்கு மாதாந்த டயாலிசிஸ் சிகிச்சை இலவசமாக அளிக்கப்படவுள்ளது.பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள சிறுநீரக நோயாளிகளின் வாழ்க்கைச் சுமைக்கு ஓரளவு நிவாரணமாக இது அமையும்.

தற்போதைய நிலையில் அனைத்து சிறுநீரக நோயாளிகளுக்கும் இலவச சிகிச்சையை அரச சுகாதார துறையினரால் வழங்க முடியாது. எனவே ஹேமாஸ் மருத்துவமனை குழுமம் இந்த நிலைமையை நன்கு புரிந்துகொண்டு இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.




# பாதுகாப்பை உறுதிசெய்யும் TikTok

TikTok அதைப் பயன்படுத்துவோருக்கு சமூக வழிகாட்டுதல்களை வெளியிட்டு பாதுகாப்பை உறுதிசெய்துள்ளது.

அறிமுகப்படுத்தப்பட்ட சில முக்கிய மாற்றங்கள் தொடர்பான விபரங்கள் இதோ:

- AI தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட உள்ளடக்கமான செயற்கை ஊடகத்தை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த விதிகளை வுமைவுழம அறிமுகப்படுத்துகிறது.
- வெறுப்புணர்வு கொண்ட பேச்சு மற்றும் வெறுக்கத்தக்க நடத்தைக்கு எதிராக பாதுகாக்க வுமைவுழம "Tribe"யை அறிமுகப்படுத்துகிறது.
- வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

TikTok இன் புதிய சமூக வழிகாட்டுதல்கள் ஏப்ரல் 21 முதல் நடைமுறைக்கு வரும்.

மேலும் இந்த விதிகள் மற்றும் தரநிலைகளை திறம்பட செயல்படுத்த உதவும் வகையில் அவர்களின் நிர்வாகிகளுக்கு கூடுதல் பயிற்சியும் அளிக்கப்படும்.

# சுத்திகரிப்பு பணியாளர்களை மேம்படுத்தும் Coca-Cola அறக்கட்டளை மற்றும் SLRCS



சுத்திகரிப்பு பணியாளர்களின் அர்ப்பணிப்புக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் உலக மீள்சுழற்சி தினத்தில் சுத்திகரிப்பு பணியாளர்களின் உணவுப் பாதுகாப்பின்மைக்கு உடனடி தீர்வை வழங்க Coca-Cola அறக்கட்டளை (TCCF) மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (SLRCS) ஆகியன இணைந்து செயற்பட்டுள்ளன.

இதன்படி, தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில் சுத்திகரிப்பு பணியாளர்களின் 1800 குடும்பங்களுக்கு உலர் உணவுகள் மற்றும் மருந்துகளுடன் அத்தியாவசிய உணவுப் பொதியை வழங்குவதற்கு இவ்விரு பிரிவினரும் ஏற்பாடு செய்துள்ளனர்.

இலங்கையில் வறுமை நிலை 25%மாக அதிகரிக்கும் என உலக வங்கி கணித்துள்ளது. இதனால்,பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் ஒரு நாளைக்கு உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் உணவுப் பொருட்களின் விலை அதிகமாக இருப்பதால், உணவின் ஊட்டச்சத்து தரமும் குறைந்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் மேலும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளன.

அதனால்தான், இந்த இக்கட்டான சூழ்நிலையில், TCCF மற்றும் SLRCS ஆகியவை சுத்திகரிப்பு பணியாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்குவதன் மூலம் இதுவரை செயல்படுத்தப்பட்ட 'Say We Care' திட்டத்தை மேலும் விஸ்தரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.




## முதல் தர தொழில் வழங்குநராக யுனிலீவர் தெரிவு

யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம் தொடர்ச்சியாக 11ஆவது ஆண்டாக, இலங்கையிலுள்ள இளங்கலைப் பட்டதாரிகளிடையே தொழில் வழங்குனராக (Employer of Choice) அங்கீகாரம் பெற்றுள்ளது. இலங்கை இளைஞர்களை நாளைய எதிர்காலத்திற்கு ஏற்ற தலைவர்களாக உருவாக்குவதற்கான நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இந்த பெருமதிப்புமிக்க விருது காண்பிக்கின்றது.

Employer of Choice ஆய்வானது, நாட்டிலுள்ள தேசிய மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களிலுள்ள முகாமைத்துவம், விஞ்ஞானம், பொறியியல் துறைகளில் உள்ள இளங்கலைப் பட்டதாரிகளிடையே நடத்தப்படும் வருடாந்த கணக்கெடுப்பாகும்.

# SLT-MOBITEL இன் BizLife

SLT-MOBITEL, நாட்டின் எந்தவொரு வியாபார சமூகத்தினதும் முதுகெலும்பாக திகழ்வதுடன், நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களுக்கு (MSMEs) புத்தாக்கமான ‘BizLife’ வழங்கி, அவற்றின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

BizLife பக்கேஜ்களினூடாக, வியாபாரங்களுக்கு தமது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு அவசியமான சகல அம்சங்களையும் கொண்ட குரல்/டேட்டா தீர்வுகள் வழங்கப்படுகின்றது.

டீணைடுகைந இனால், செலவுச் சிக்கனமான தெரிவுகளை எதிர்நோக்கும் நிறுவனங்களுக்கு செலுத்தும் பணத்துக்கு சிறந்த பெறுமதியும் வழங்கப்பட்டு, சகாயமான விலையிடலின் பிரகாரம் அமைந்த தீர்வையும், அதிகரித்துச் செல்லும் டிஜிட்டல் பொருளாதாரத்தை அணுகுவதற்கு உதவியாகவும் அமைந்திருப்பதுடன், நிலைபேறான வளர்ச்சியை எய்தவும் ஏதுவாக அமைந்துள்ளது.

SLT-MOBITEL Enterprise இன் ஒப்பற்ற தொழில்நுட்பம், வளங்கள் மற்றும் தங்கியிருக்கும் சேவைகளுடன், Bizlife பக்கேஜ்கள் நான்கு விறுவிறுப்பான உள்ளம்சங்களான BizLife Mini, BizLife Mini Flash, BizLife Advance மற்றும் BizLife Advance Flash ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

